Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்
Madurai Mani Tamil Evening Daily ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
2, Town Hall Road, Madurai-625 001.


| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மதுரை பதிப்பு | *மணி 54 | * ஓசை 45 | உள்ளூர் - 14.02.2026 | சனி | விலை ரூ.3/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
| Madurai Edition | *Vol 54 | * Issue 45 | வெளியூர் - 15.02.2026 | ஞாயிறு | Price Rs. 3/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |


கைரேகை சாஸ்திரம்: காதல் திருமணத்தின் குறியீடுகள்!

செபி இல் 90 காலியிடங்கள்

சி.பி.எஸ்.இ., /+ 2 தேர்வு: இனி மதிப்பெண் சரிபார்ப்பு இல்லை!

பிப். 15-ல் குறைகிறது சுங்க கட்டணம்..

## பிரதமர் அலுவலகத்தின் புதிய வளாகமான ‘சேவா தீர்த்தம்’.. பிரதமர் மோடி திறந்து வைத்தார்..!

புதுடெல்லி, பிப். 14–

பிரதமர் அலுவலகத்தின் புதிய கட்டிடமான சேவா தீர்த்தத்தையும், கர்தவ்ய பவன் 1 மற்றும் 2 ஐயும் பிரதமர் நரேந்திர மோடி வெள்ளிக்கிழமை திறந்து வைத்தார். இந்த திறப்பு விழா இந்தியாவின் நிர்வாக நிர்வாக கட்டமைப்பில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் மைல்கல்லை குறிக்கிறது.. மேலும் நவீன, திறமையான, அணுகக்கூடிய மற்றும் குடிமக்களை மையமாகக் கொண்ட நிர்வாக சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவதற்கான பிரதமரின் உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது.



சேவா தீர்த்தத்தில் பிரதமர் அலுவலகம், தேசிய பாதுகாப்பு கவுன்சில் செயலகம் மற்றும் அமைச்சரவை செயலகம் ஆகியவை உள்ளன, இவை அனைத்தும் முன்னர் வெவ்வேறு இடங்களில் அமைந்திருந்தன. கர்தவ்ய பவன் 1 மற்றும் 2 சட்டம், பாதுகாப்பு, நிதி, சுகாதாரம், விவசாயம் மற்றும் பல முக்கிய அமைச்சகங்களை உள்ளடக்கியுள்ளன.

இரண்டு கட்டிட வளாகங்களிலும் டிஜிட்டல் முறையில் ஒருங்கிணைந்த அலுவலகங்கள், கட்டமைக்கப்பட்ட பொது இடைமுக மண்டலங்கள் மற்றும் மையப்படுத்தப்பட்ட வரவேற்பு வசதிகள் உள்ளன. 4–நட்சத்திர GRI–HA தரநிலைகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்ட இந்த வளாகங்கள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைப்புகள், நீர் பாதுகாப்பு நடவடிக்கைகள், கழிவு மேலாண்மை தீர்வுகள் ஆகியவற்றை உள்ளடக்கி உள்ளன..

## பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் ஒன்றுபடுவோம்: துணை ஜனாதிபதி!



புதுடில்லி, பிப். 14–

‘‘ பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் ஒன்றுபடுவோம்,” என துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

துணை ஜனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளதாவது: கோவையில் நடைபெற்ற தொடர் குண்டுவெடிப்புகளில் உயிரிழந்த அப்பாவி மக்களை இந்நாளில் கனத்த மனதுடன் நினைவு கூர்ந்து எனது ஆழ்ந்த அஞ்சலியை செலுத்துகிறேன். அது நம் தேசத்தின் வரலாற்றில் மறக்க முடியாத, இருண்ட பக்கமாகும்.

அன்று அத்வானி வந்திருந்த வேளையில் நிகழ்ந்த இந்த கொடூர குண்டுவெடிப்புகள், பல குடும்பங்களின் வாழ்வில் ஆறாத காயங்களை ஏற்படுத்தி, நம் நாட்டின் மனச்சாட்சியையே உலுக்கியது. அந்த நாளின் பயமும் பதற்றமும் நிறைந்த சூழ்நிலை இன்றும் என் நினைவில் ஆறாத வடுவாகப் பதிந்துள்ளது. அந்த குண்டு வெடிப்புகளில் ஒன்றில் அன்று நான் மயிரிழையில் உயிர் தப்பினேன். குற்றுயிரும் குலையுயிருமாய் கிடந்தவர்களை மருத்துவமனைகளில் சேர்த்து காக்க போராடிய அந்த கொடிய நிமிடங்கள் என் வாழ்வின் துயரம் மிகுந்த காலங்கள்.

இந்நாளில் உயிரிழந்த ஒவ்வொரு ஆன்மாவையும் பணிவுடன் நினைவுகூர்ந்து, துயரத்தில் வாழும் குடும்பங்களுடன் ஒருமித்த உணர்வில் நின்று அவர்களது துயரங்களில் பங்கெடுத்துக் கொள்கிறேன்.

இந்நாளில், அனைவரும் பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் ஒன்றுபட்டு நின்று, அமைதி, ஒற்றுமை மற்றும் தேசிய ஒருமைப்பாட்டை காக்கும் வகையில் உறுதி எடுத்துக் கொள்வோம். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

## சி.பி.எஸ்.இ., பிளஸ் 2 தேர்வு முடிவுகளில் இனி மதிப்பெண் சரிபார்ப்பு இல்லை!

புதுடில்லி, பிப். 14–

‘இந்தாண்டு முதல் பிளஸ் 2 பொதுத் தேர்வு விடைத்தாள்கள், ‘டிஜிட்டல்’ முறையில் திருத்தப்படுவதால் இனி, மதிப்பெண் சரிபார்ப்புக்கு அவசியம் இருக்காது’ என, சி.பி. எஸ்.இ., அறிவித்துள்ளது.

சி.பி.எஸ்.இ., எனப்படும் மத்திய இடைநிலைக் கல்வி வாரியம், இந்தாண்டுக்கான 10 மற்றும் பிளஸ் 2 மாணவர்களுக்கு பொதுத் தேர்வுகளை நடத்த தயாராகி வருகிறது.

இந்த ஆண்டுத் தேர்வுகளில் பல்வேறு மாற்றங்களை செய்துள்ள வாரியம், இது குறித்த தெளிவான விளக்கங்களை பள்ளி முதல்வர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு நேற்று வழங்கியது.

‘ஆன்லைன்’ வாயிலாக நடந்த கூட்டத்தில் பல்வேறு பள்ளி முதல்வர்கள் மற்றும் ஆசிரியர்கள் பங்கேற்றனர்.

இது குறித்து சி.பி.எஸ்.இ., தேர்வு கட்டுப்பாட்டாளர் சன்யம் பரத்வாஜ் கூறியதாவது:



சி.பி.எஸ்.இ.,யின் கீழ் நடத்தப்படும் 10 மற்றும் பிளஸ் 2 தேர்வுகளை இந்தாண்டு 46 லட்சம் பேர் எழுத உள்ளனர். இந்தாண்டின் மிக முக்கிய மாற்றமாக, பிளஸ் 2 விடைத்தாள்கள் முதன்முதலில் டிஜிட்டல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, திரைவழி மதிப்பீடு முறையில் திருத்தப்பட உள்ளன.

மதிப்பீட்டு பணியில் தவறுகளை குறைக்கவும், விரைவாக முடிவுகளை வெளியிடவும் இந்த ஆண்டு முதல் டிஜிட்டல் முறையில் விடைத்தாள்கள் திருத்தப்பட உள்ளன. இதனால், இனி பிளஸ் 2 விடைத்தாள்களின் மதிப்பெண்களை சரிபார்க்க முடியாது. பழைய முறையில், மாணவர்கள் மொத்த மதிப்பெண்கள் அல்லது விடுபட்ட மதிப்பெண்களில் உள்ள முரண்பாடுகளை களைய, அவற்றை சரிபார்க்கும் முயற்சியில் இறங்குவர்.

புதிய டிஜிட்டல் மதிப்பீட்டுத் திட்டத்தில், இதுபோன்ற முரண்பாடுகள் ஆரம்பத்திலேயே நீக்கப்படும். இருப்பினும், 10ம் வகுப்பு விடைத்தாள்களின் மதிப்பீடு, முன்பு போல காகித முறையிலேயே தொடரும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## தங்கம் விலையில் யூ–டர்ன்.. அமெரிக்காவில் நடந்த மாற்றத்தால் தங்கம் வாங்குவோருக்கு ஷாக்...!

அமெரிக்கா, பிப். 14–

தங்க விலை அமெரிக்க சந்தையின் வெள்ளிக்கிழமை வர்த்தகத்தில் பெரும் திருப்பத்தை சந்தித்துள்ளது. புதன், வியாழன் ஆகிய இரண்டு நாட்களில் பதிவான சரிவிலிருந்து மீண்டு, கிட்டத்தட்ட 2% உயர்ந்து மீண்டும் 5,000 டாலர் அளவை தாண்டியுள்ளது. இதன் எதிரொலியாக இந்தியாவிலும் தங்கம் விலை சனிக்கிழமை ரீடைல் சந்தையில் தங்கம் விலை உயர்ந்துள்ளது. தமிழ்நாட்டில் தங்கம் விலை இன்று கணிசமாக உயர்ந்துள்ளது. 24 காரட் தங்கம் ஒரு கிராமுக்கு 175 அதிகரித்து 15,884 ரூபாயாக உயர்ந்துள்ளது. இதேபோல் 22 காரட் தங்கம் ஒரு கிராமுக்கு ரூ.160 உயர்ந்து ரூ.14,560–ஆக வர்த்தகமாகிறது. 18 காரட் தங்கம் ஒரு கிராமுக்கு 50 உயர்ந்து 12,450 ரூபாயாக உள்ளது.





வெள்ளி விலையில் எவ்விதமான மாற்றமும் இல்லாமல் 2,80,000 ரூபாய்க்கும், பிளாட்டினம் விலை 10 கிராமுக்கு 920 ரூபாய் உயர்ந்து 60,060 ரூபாயாக உள்ளது. இன்றைய விலை உயர்வுக்கு முக்கியமான காரணம் அமெரிக்காவின் ஜனவரி மாத பணவீக்க டேட்டா. அமெரிக்காவில் ஜனவரி மாத பணவீக்கம் (CPI) எதிர்பார்த்ததை விட குறைந்து 2.4% ஆக பதிவானது. இது ஃபெடரல் ரிசர்வ் வட்டி விகிதத்தை விரைவில் குறைக்கலாம் என்ற எதிர்பார்ப்பை அதிகரித்தது. இதனால் தங்கத்தில் முதலீட்டாளர்கள் ஆர்வம் காட்டினர். அமெரிக்க தொழிலாளர் புள்ளியியல் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையின்படி, அந்நாட்டின் மொத்த CPI 2.4% ஆக குறைந்தாலும், கோர் CPI (உணவு மற்றும் எரிபொருள் விலைகளை தவிர்த்தது) 2.5% ஆகவே நிலைத்துள்ளது. இதனால் ஃபெடரல் ரிசர்வ் அதிகாரிகள் இன்னும் பணவீக்கம் இன்னும் குறைய வேண்டும்னெ எதிர்பார்த்து வருகின்றனர், இதனால் வட்டி விகிதம் உடனடியாக குறைவதற்கான வாய்ப்புகள் குறைவு. இருப்பினும், பணவீக்கம் குறைந்துள்ளது தங்கத்திற்கு பெரும் நன்மையாக அமைந்தது.

நேற்றைய அமெரிக்க சந்தை வர்த்தகத்தில் தங்கம் முதலில் 5,000 டாலர் அருகே சென்றது, பின்னர் 4,950 டாலர் வரை சரிந்தது. ஆனால் பணவீக்கம் குறைந்த நம்பிக்கை காரணமாக முதலீட்டாளர்களின் கவனம் தங்கம் மீது திரும்பியதால் அதிகளவிலான முதலீடுகள் குவிந்தது. இதனால் தங்கம் அகிகமாக முதலீடு பெற்று விலை உயர்ந்தது. அமெரிக்க வேலைவாய்ப்பு தரவுகளும் சரி பணவீக்கமும் சரி வட்டி குறைப்பிற்கு மிகவும் ஆதாரவமாக செயல்பட்டு வருகிறது. இது பொருளாதாரம் வலுவாக உள்ளதை காட்டுகிறது. ஆயினும் அமெரிக்க மத்திய வங்கியான ஃபெடரல் ரிசர்வ் உடனடியாக வட்டி குறைப்புக்கு செல்ல வாய்ப்பு குறைவு என்று தெரிகிறது. ஜெரோம் பவல் தலைமையிலான அதிகாரிகள் மே மாதம் வரை காத்திருப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. புதிய கவர்னர் கெவின் வார்ஷ் வந்த பின்பு தான் வட்டி விகிதம் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சேலம் உள்ளிட்ட நகரங்களில் இருக்கும் மக்களுக்கு இன்றைய விலை உயர்வு மூலம் தங்கம் நகை வாங்க திட்டமிடுவோருக்கு கூடுதல் செலவை ஏற்படுத்தும்.





தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் ஜோலார்பேட்டையிலிருந்து திருப்பத்தூர் செல்லும் வழியில், பெருந்திரளான பெண்கள் சந்தித்து, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறும் மகளிருக்கு 5 ஆயிரம் ரூபாய் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டதற்காகவும், திராவிட மாடல் 2.0 ஆட்சிக் காலத்தில், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை 2 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்று அறிவித்தமைக்காகவும் இனிப்புகளை வழங்கி நன்றி தெரிவித்துக் கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் திருப்பத்தூரில் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அனைத்து வசதிகளுடன் அமைக்கப்பட்டு வரும் திறந்தவெளி மற்றும் உள்விளையாட்டரங்கம் உள்ளடக்கிய மாவட்ட விளையாட்டு வளாகத்தின் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெகத்ரட்சகன் திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் க. சிவசௌந்திரவல்லி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

த தலையங்கம்
மதுரை மணி
சனிக்கிழமை 14.02.2026
விசுவாவசு தமிழ் வருடம்
மாசி மாதம் 02-ம் தேதி

## தேம்பி தேம்பி அழும் பெங்களூர் ரியல் எஸ்டேட் நிறுவனங்கள்..




ஐடி துறையில் ரெசிஷன் என்று சொல்லாமலேயே ரெசிஷனுக்கான அனைத்து பாதிப்பும் உருவாகியுள்ளது, அதிலும் குறிப்பாக இந்தியாவின் ஐடி துறையின் தலைநகரான பெங்களூரில் மோசமான பாதிப்பு தெரிய துவங்கியுள்ளது. பொதுவாக ரெசிஷன் பொருளாதாரம் மற்றும் நிதி சந்தை அடிப்படையில் உருவாகும், ஆனால் இப்போது ரெசிஷன் ஏஐ மூலம் வந்துள்ளது. ரெசிஷன் வரும் காலத்தில் டாலரில் வருமானம் ஈட்டும் அனைத்து இந்திய ஐடி நிறுவனங்களும் பாதிப்பு அடையும், அதேபோல் ஐடி மற்றும் டெக் துறையில் பணிநீக்கம் அதிகரிக்கும். டெக் ஊழியர்கள் செலவு செய்வதை குறைப்பார்கள், இதனால் ஐடி மற்றும் டெக் துறையையும், ஊழியர்களை சார்ந்து வர்த்தகம் செய்யும் ஹோட்டல் முதல் வங்கிகள் வரையில் பாதிக்கப்படும். இப்படி பல விஷயங்கள் நடக்கும். இதேபோல் பங்குசந்தையிலும் ஐடி துறையின் மூலம் வர்த்தக பாதிப்பு எதிர்கொள்ளும் நிறுவனங்கள் அனைத்தும் பாதிக்கப்படும். அப்படி தான் பெங்களூரை தலைமையிடமாகவும், முக்கிய வர்த்தக பகுதியாக கொண்டு செயல்படும் ரியல் எஸ்டேட் நிறுவனங்களின் பங்குகள் வெள்ளிக்கிழமை கடுமையாக சரிந்துள்ளது.

ஒருப்பக்கம் ஐடி பங்குகள் மோசமான சரிவை பதிவு செய்து கடந்த 8 நாட்களில் சுமார் 6 லட்சம் கோடி ரூபாய் அளவிலான சந்தை மதிப்பை இழந்துள்ளது. இந்த சூழ்நிலையில் ஐடி துறையை நம்பி வர்த்தகம் வர்த்தகம் செய்யும் மற்ற துறை வர்த்தகமும் பாதிப்படைய துவங்கியுள்ளது.

வர்த்தகத்தில் Prestige Estates Projects, Oberoi Realty, Brigade Enterprises உள்ளிட்ட முக்கிய ரியல் எஸ்டேட் நிறுவனங்களின் பங்குகள் 4% வரை வீழ்ச்சியடைந்தன. இதனால் ரியல் எஸ்டேட் துறை இன்டெக்ஸ் மட்டும் 2%க்கும் மேல் சரிந்தது. இந்த சரிவுக்கு முக்கிய காரணம் IT துறையில் ஏற்பட்டுள்ள AI அச்சம்.

**ஐடி ஊழியர்களுக்கு என்ன பயன்?**

IT துறை பலவீனமானால் பெங்களூரு ரியல் எஸ்டேட் ஏன் பாதிக்கப்படுகிறது? பெங்களூரு இந்தியாவின் ஐடி தலைநகரம் என்பதால் இங்கு Infosys, Wipro, TCS போன்ற நிறுவனங்களில் பணியாற்றும் லட்சக்கணக்கான ஐடி ஊழியர்கள், ரியல் எஸ்டேட் துறை வர்த்தகத்தின் மிகப்பெரிய பகுதியாக உள்ளனர். குறிப்பாக நடுத்தர மற்றும் பிரீமியம் வீடுகள், அடுக்குமாடி குடியிருப்புகள் ஆகியவற்றை வாங்குபவர்களில் பெரும்பாலானோர் ஐடி துறை ஊழியர்கள் தான். தற்போது AI தொழில்நுட்பத்தால் பணிகளை ஆட்டோமேட் செய்யத் தொடங்கியுள்ளதால், ஐடி நிறுவனங்களில் வேலைவாய்ப்பு குறையலாம், ஊழியர்களை பணிநீக்கம் செய்யப்படலாம் என்ற அச்சம் எழுந்துள்ளது. இதனால் வரும் காலத்தில் பெங்களூரில் வீடு வாங்கும் தேவை குறையும் என்று முதலீட்டாளர்கள் அஞ்சுகின்றனர்.

கொரோனாவுக்கு பின்பு ஏற்பட்ட மாற்றம் கொரோனா காலத்தில் இந்திய சந்தையில் ஊழியர்கள் வீட்டிலிருந்து பணியாற்றும் முறை அதிகரித்த நிலையில் வீடுகளின் விற்பனை குறைந்தது, பெரு நகரங்களில் வாடகை வாடுகளுக்கான டிமாண்டும் குறைந்தது. இதேபோல் வங்கியில் நிலவிய அதிகப்படியான வட்டி விகிதங்களும் வர்த்தகத்தை மந்தமாக்கியது. இந்த நிலையில் கொரோனாவுக்கு பின்பு வொர்க் ஃப்ரம் ஹோம் கலாச்சாரம் குறைந்து, வங்கியில் வட்டி குறைந்த காரணத்தால் கடந்த 3–4 வருடங்களாக ரியல் எஸ்டேட் துறை வேகமாக வளர்ச்சி அடைந்து வந்தது. குறிப்பாக பெங்களூரில் ஆடம்பர, ப்ரீமியம் வீடுகளுக்கான டிமாண்ட் அதிகரித்தது. எல்லாம் நன்றாக இருந்த வேளையில் இப்போது AI காரணமாக ஐடி ஊழியர்களின் எண்ணிக்கை குறையும் என்ற அச்சம் பெங்களூரு ரியல் எஸ்டேட் சந்தைக்கு தலைவலியாக மாறியுள்ளது.

**தமிழ்நாட்டு ஐடி ஊழியர்களின் வீடு கனவு பாதிப்பா?**

தமிழ்நாட்டில் இருந்து பெங்களூருக்கு வேலைக்கு செல்லும் ஐடி ஊழியர்கள் மிக அதிகம். சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை போன்ற நகரங்களில் இருந்து பெங்களூரில் வேலை செய்யும் இளைஞர்கள் லட்சக்கணக்கானோர் உள்ளனர். அவர்களில் பலர் பெங்களூரில் வீடு வாங்கி குடும்பத்துடன் தங்க திட்டமிட்டு வரும் வேளையில் ஏஐ பாதிப்பு பலரின் கனவை தகர்த்துள்ளது. இப்போது ஐடி துறையில் AI காரணமாக வேலை இழப்பு அல்லது சம்பள உயர்வு தாமதம் ஏற்படும் என்ற அச்சம் உருவாகியுள்ளது. இதனால் பெங்களூரில் வீடு வாங்கும் கனவு தள்ளிப்போகலாம் அல்லது ரத்தாகலாம். இதனால் வீடுகளுக்கான டிமாண்ட் குறைந்து விலையும் குறையலாம், ஆனால் வாங்குவதற்கான மக்கள் எண்ணிக்கை குறையும் காரணத்தால் இது நடக்காது, இதேபோல் இதை ஐடி துறை அல்லாத மக்கள் பெரும் வாய்ப்பாக பார்க்கலாம்.

**முதலீட்டாளர்கள் என்ன செய்ய வேண்டும்?**

ஐடி துறையில் ஏற்பட்டுள்ள இந்த சரிவு தற்காலிக பயமா அல்லது நீண்டகால பிரச்சினையின் தொடக்கமா என்பதை அடுத்த சில மாதங்களில் தெரியவரும். ரியல் எஸ்டேட் நிறுவனங்கள் தற்போது பெங்களூரு சந்தையை மட்டும் சார்ந்திருப்பதால், IT துறையின் நிலைமையை உன்னிப்பாக கவனிக்க வேண்டிய நிலை உள்ளது. தமிழ்நாட்டு இளைஞர்கள் இப்போது வீடு வாங்கும் திட்டத்தை தள்ளி வைத்துவிட்டு, ஐடி துறையில் AI திறன்களை மேம்படுத்துவது நல்லது என்று நிபுணர்கள் அறிவுறுத்துகின்றனர்.

## தமிழ்நாடு அரசுடன் MoU: சென்னையில் புதிய R&D வளாகத்திற்கு $400 மில்லியன் முதலீடு செய்யும் KLA Corporation




சென்னை, பிப். 14–

செமிகண்டக்டர் செயல்முறை கட்டுப்பாடு மற்றும் மேம்பாட்டு தொழில்நுட்பத்தில் உலகளாவிய முன்னணியில் உள்ள KLA Corporation (NASDAQ: KLAC), சென்னையில் புதிய ஆராய்ச்சி & மேம்பாடு (R&D) மற்றும் புத்தாக்க வளாகத்தை நிறுவ தமிழ்நாடு அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. அடுத்த 10 ஆண்டுகளில் $400 மில்லியன் (₹3,600 கோடி) வரை முதலீடு செய்யும் நோக்கத்துடன், இந்த வளாகம் இந்தியாவை AI மற்றும் மென்பொருள் சார்ந்த செமிகண்டக்டர் புத்தாக்கத்திற்கான மூலோபாய மையமாக உருவாக்கும் நிறுவனத்தின் நீண்டகால உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது. 12 ஏக்கரில் திட்டமிடப்பட்டுள்ள இந்த வளாகம், காலப்போக்கில் 1.5 மில்லியன் சதுர அடி வரை விரிவடையும் திறன் கொண்டதாக இருக்கும். இது மேம்பட்ட ஆராய்ச்சி மற்றும் பொறியியல் பணிகளை ஆதரிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு, 10 ஆண்டுகளில் சுமார் 4,000 வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. MoU கையெழுத்து நிகழ்வு M. K. Stalin முன்னிலையில் நடைபெற்றது; இதில் Udhayanidhi Stalin, T. R. B. Rajaa, N. Muruganandam, Darees Ahamed மற்றும் Arun Roy உடனிருந்தனர்.

மேலும், Bobby Bell மற்றும் Dominic David ஆகியோர் கலந்துகொண்டனர்.

“இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக KLA–வின் உலகளாவிய வளர்ச்சியில் இந்தியா முக்கிய பங்கு வகிக்கிறது. சென்னை வளாகம் தற்போதைய R&D திறன்களை விரிவுபடுத்தி, உலகளாவிய ஒத்துழைப்பையும் வாடிக்கையாளர் ஆதரவையும் வலுப்படுத்தும்,’’ என டொமினிக் டேவிட் தெரிவித்தார். அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, இந்த முதலீடு தமிழ்நாட்டின் செமிகண்டக்டர் மதிப்புச் சங்கிலி பங்கை மேலும் உறுதிப்படுத்தும் எனக் கூறினார்.

## True Silver பிராண்டின் அறிமுகம்: உள்நாட்டு D2C வெள்ளி நகை சந்தையில் காலடி பதிக்கிறது ACPL Exports!




சென்னை , பிப். 14–

இந்தியாவின் முன்னணி வெள்ளி உற்பத்தி மற்றும் ஏற்றுமதி நிறுவனமான ACPL Exports, தனது முதல் நேரடி நுகர்வோர் (D2C) நகை பிராண்டான True Silver–ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. உள்நாட்டு மற்றும் டிஜிட்டல் சில்லறை சந்தையில் முக்கிய விரிவாக்கம் இந்த முயற்சி பார்க்கப்படுகிறது. பல தசாப்தங்களாக ACPL பெற்றுள்ள உலகளாவிய உற்பத்தி நிபுணத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு, தினசரி அணியக்கூடிய வெள்ளி நகைகளுக்கான வளர்ந்து வரும் தேவை மீது கவனம் செலுத்தும், நவீன வடிவமைப்பு சார்ந்த டிஜிட்டல் பிராண்டாக TrueSilver உருவாக்கப்பட்டுள்ளது.

மில்லினியல் கள் மற்றும் Gen Z தலைமுறையை இலக்காகக் கொண்டு, சுமார் 900 BIS ஹால்மார்க் நகைகள் பெண்கள், ஆண்கள், குழந்தைகளுக்கு அறிமுகமாகின்றன. இதில் 80%–க்கும் மேற்பட்டவை பெண்களுக்கு வடிவமைக்கப்பட்டவை; பிரேஸ்லெட்கள், காதணிகள், மோதிரங்கள், நெக்லஸ்கள், கொலுசுகள் உள்ளிட்டவை இடம்பெறுகின்றன. வெள்ளி மட்டுமல்லாது தங்கம் மற்றும் ரோஸ் கோல்டு ஃபிஷ் களிலும், ஆண்கள் பெண்களுக்கான தனிப்பயனாக்கப்பட்ட (personalised) நகை தொகுப்பும் True Silver–ன் தனித்துவம் ஆகும். இந்த பிராண்ட் அதன் D2C தளத்துடன் Amazon India மற்றும் Myntra வழியாகவும் கிடைக்கும்.

“TrueSilver எங்கள் வளர்ச்சியின் அடுத்த முக்கிய கட்டமாகும்,’’ என்று சித்தார்த் குப்தா, இயக்குனர், ACPL Exports தெரிவித்தார். குறுகிய காலத்தில் ₹100 கோடி வருவாய் இலக்கு மற்றும் அடுத்த 23 ஆண்டுகளில் ₹250 கோடியாக வளர்ச்சி, 100 சில்லறை கடைகள் விரிவாக்கம் ஆகியவை திட்டமிடப்பட்டுள்ளன. ACPL–ன் பரந்த உத்தியின் ஒரு பகுதியாக, பிராண்டட் நுகர்வோர் பிரிவு காலப்போக்கில் மொத்த வருவாயில் 3040% பங்களிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது; இது Zero–waste உற்பத்தி, நேர்மையான தொழிலாளர் நடைமுறைகள் மற்றும் உலக தர நிலைகளால் ஆதரிக்கப்படுகிறது.

## தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகள் சாதனையின் 2025ல் 5% வளர்ச்சி: 1.95 கோடி சர்வதேச வருகையுடன் புதிய உச்சத்தை எட்டிய துபாய்!



துபாய், பிப். 14–

துபாய் சுற்றுலா துறை 2025ஆம் ஆண்டில் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக சாதனை புரிந்து, 1 கோடி 95.9 லட்சம் சர்வதேச இரவு தங்கும் பயணிகளை வரவேற்றுள்ளது. இது 2024ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 5% அதிகரிப்பாகும் என்று துபாய் Department of Economy and Tourism (DET) தெரிவித்துள்ளது. மேலும், டிசம்பர் மாதத்தில் ஒரே மாதத்தில் 20 லட்சத்திற்கும் அதிகமான பயணிகளை வரவேற்றது முக்கிய மைல் கல்லாக அமைந்துள்ளது.

முக்கிய உலகளாவிய கூட்டாண்மை கள், வலுவான மார்க்கெட்டிங் பிரச்சாரங்கள் மற்றும் ஆண்டு முழுவதும் நடைபெற்ற பெரிய நிகழ்வுகள் இந்த வளர்ச்சிக்கு காரணமாக அமைந்தன. மேற்கு ஐரோப்பா முக்கிய சந்தையாக தொடர்ந்ததுடன், தென் ஆசியா, CIS மற்றும் கிழக்கு ஐரோப்பா, GCC மற்றும் MENA பகுதிகளிலிருந்தும் அதிக வருகை பதிவாகியுள்ளது.

மற்றும் விருந்தோம்பல் துறையில் 2025ஆம் ஆண்டு சிறப்பான வளர்ச்சியை கண்டது. ஆண்டு முடிவில் 827 ஹோட்டல்களில் மொத்தம் 1,54,264 அறைகள் கொண்ட நகரமாக துபாய் உயர்ந்துள்ளது. முதலீட்டாளர்களை ஈர்க்க ஹோட்டல் ஊக்கத் திட்டம் மற்றும் ‘காண்டாக்ட்லெஸ்’ செக்–இன் போன்ற புதிய முயற்சிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.


Issam Kazim, Dubai Corporation for Tourism and Commerce Marketing (Visit Dubai) நிறுவனத்தின் CEO, “இந்த சாதனை உலகளாவிய நம்பிக்கையை பிரதிபலிக்கிறது. D33 பொருளாதார நோக்கத்துடன் இணைந்த கொள்கைகள் மற்றும் தொடர்ச்சியான முதலீடுகள் மூலம் துபாயை உலகின் சிறந்த சுற்றுலா, வாழ்வு மற்றும் வேலை நகரமாக உருவாக்குவோம்’’ என தெரிவித்தார்.

## பெண்கள் முதலில் முன்னெடுக்கும் நகரங்கள்: ஷாதி ட்ரண்டின் நுண்ணறிவு அறிக்கை வெளியீடு!

மதுரை, பிப். 14–

பெண்கள் முதலில் முன்னெடுக்கும் நகரங்கள் குறித்த ஷாதி டாட் காமின் சமீபத்திய நுண்ணறிவு அறிக்கையான ஷாதி ட்ரெண்டிங் வெளியாகியுள்ளது. ஷாதி தளத்தில் உள்ள உண்மையான நடத்தை தரவுகளை அடிப்படையாகக் கொண்டு, நவீன இந்தியத் திருமணப் பொருத்த தேடல்களில் விருப்பங்களை வெளிப்படுத்தும் முறை எவ்வாறு பரிணாம வளர்ச்சியடைந்து வருகிறது என்பதை இந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. இதில் மிக முக்கியமான ஒரு கண்டுபிடிப்பு என்னவென்றால், பெண்கள் இப்போது தங்களை யாராவது அணுகுவார்கள் என்று காத்திருப்பதில்லை. மாறாக, அவர்களே உரையாடல்களைத் தொடங்குகிறார்கள், முன்கூட்டியே தங்கள் விருப்பத்தைத் தெரிவிக்கிறார்கள் மேலும் தங்கள் வாழ்க்கைத்துணையைத் தேடும் பயணத்தில் அதிகக் கட்டுப்பாட்டைத் தாங்களே எடுத்துக்கொள்கிறார்கள்.

சுவாரஸ்யமான விஷயம் என்னவென்றால், இந்த மாற்றத்தை இந்தியாவின் மிகப்பெரிய பெருநகரங்கள் அல்லாமல், 2ஆம் மற்றும் 3ஆம் நிலை நகரங்களே முன்னெடுத்துச் செல்கின்றன. லக்னோ, பாட்னா, மதுரை, விசாகப்பட்டினம், நாக்பூர் ஆகிய நகரங்களைச் சேர்ந்த பெண்கள், இந்தத் தளத்தில் தாங்களாகவே முன்வந்து உரையாடலைத் தொடங்குவதில் முன்னணியில் உள்ளனர். இவர்களின் அதிகரித்து வரும் இந்த பங்களிப்பு, முற்போக்கான உறவுமுறை நடத்தைகள் பெரும்பாலும் பெருநகரங்களால் மட்டுமே இயக்கப்படுகின்றன என்ற கருத்தை மாற்றியமைக்கிறது. இதற்கு மாறாக, சென்னை, ஐதராபாத், டெல்லி போன்ற 1ஆம் நிலை நகரங்கள் பெண்கள் முன்னெடுக்கும் உரையாடல்களில் ஒப்பீட்டளவில் குறைந்த அளவையே பதிவு செய்துள்ளன. அதே நேரத்தில், மும்பை, பெங்களூரு ஆகிய நகரங்கள் இந்த முன்னணிப் பட்டியலில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



## கைரேகை சாஸ்திரம்: காதல் திருமணத்தை குறிக்கும் சில முக்கிய குறியீடுகள்!



திருமண வயதை நெருங்கும் இளவட்டங்களுக்கு தங்கள் திருமணம் எப்படி நடக்கும்? காதல் திருமணம் செய்யும் வாய்ப்பு ஏதும் உள்ளதா? என்பதை அறிந்துக்கொள்ள ஒரு ஆர்வம் இருக்கும். இவர்களின் ஆர்வத்திற்கு பதில் கூறும் வகையில், கைரேகை சாஸ்திரம் சில குறிப்புகளை கொண்டுள்ளது. ஆம், தனி ஒரு நபரின் உள்ளங்கையில் இருக்கும் எண்ணற்ற கோடுகளில் ஒரு சில அடையாளங்கள், அவர்களின் திருமணத்தை குறித்து விவரிப்பதாக நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர். அதிலும் குறிப்பாக, காதல் திருமணத்திற்கான வாய்ப்பு உள்ளதா? இல்லையா? என்பதை அறிந்துக் கொள்ளவும் உதவி செய்வதாக நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர். காதல் திருமணத்திற்கான வலுவான சாத்தியக்கூறுகளை குறிக்கும் அந்த சில குறியீடுகள் மற்றும் அடையாளங்கள் நம் உள்ளங்கையில் எங்கு உள்ளது? இந்த அடையாளங்களை எப்படி புரிந்துக்கொள்வது? என்பது குறித்து சற்று விரிவாக நாம் இங்கு காணலாம்!

**திருமணத்தை குறிக்கும் ரேகை!**

கைரேகை சாஸ்திர குறிப்புகளின் படி, நம் உள்ளங்கையில் திருமணத்தை குறிக்கும் ரேகையானது புதன் மேட்டுக்கு அருகில் (சுண்டு விரலுக்கு கீழ் பகுதியில்) அமைந்துள்ளது. அதாவது, புதன் மேட்டின் வெளிப்புறத்தில் இருந்து உள்ளே செல்லும் கோட்டை குறிக்கிறது. குறித்த இந்த கோட்டின் அமைவிடம், தன்மை மற்றும் ஆழத்தை பொறுத்து உங்கள் திருமண வாழ்க்கை எப்படி இருக்கும்? என்பதை நாம் அறிந்துக்கொள்ள முடியும். குறிப்பாக, ரேகைக்கு உரியவரின் திருமணம் நிச்சயிக்கப்பட்ட திருமணமாக இருக்குமா? அல்லது காதல் திருமணமாக இருக்குமா? என்பதை அறிந்துக்கொள்ள முடியும்.

**காதல் திருமணமா? நிச்சயிக்கப்பட்ட திருமணமா?**

உள்ளங்கையில் இருக்கும் இந்த திருமண ரேகையின் நிலையை பொறுத்து உங்கள் திருமணம் எப்படி நிகழும்? என்பதை புரிந்துக்கொள்ள முடியும். அந்த வகையில் உங்கள் திருமண கோட்டில் ஒரு சதுர குறியீடு இருப்பின், உங்களுக்கு காதல் திருமணம் நடப்பதற்கான சாத்தியக்கூறு அதிகம் என நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர். அதாவது, உங்கள் திருமணகோட்டில் தெளிவான ஒரு சதுர குறியீடு இருப்பது, காதல் திருமணத்தின் வாய்ப்பை அதிகரிக்கும் என கைரேகை சாஸ்திர நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

**ஆழமாகவும், தெளிவாகவும் இருந்தால்?**

நிபுணர்கள் கூற்றுப்படி இந்த கோடு தெளிவாகவும், ஆழமாகவும் இருப்பின் உங்கள் திருமண வாழ்க்கை நிலையான மற்றும் மகிழ்ச்சியான மண வாழ்க்கையாக இருக்கும். அதாவது, திருமண வாழ்க்கையில் பெரிய பிரச்சனைகள் ஏதும் இருக்காத; கணவன் – மனைவி இடையே பரஸ்பர புரிதல் காணப்படும். வாழ்க்கை மகிழ்ச்சியாக செல்லும்.

**திருமண ரேகை வளைந்து இருந்தால்?**

திருமண ரேகையானது மேல்நோக்கி வளைந்த வடிவில் இருப்பின், உங்கள் மண வாழ்க்கை மகிழ்ச்சியான தருணங்களை கொண்டிருக்கும் எனவும்; அதேநேரம், கீழ்நோக்கி வளைந்திருப்பின் சிக்கலான வாழ்க்கையாக இருக்கும் எனவும் குறிப்புகள் தெரிவிக்கின்றன. அதாவது, உங்கள் திருமண ரேகை கீழ் நோக்கி வளைந்தபடி, இருதய கோட்டை தொடும் வகையில் இருப்பின், வாழ்க்கை துணையின் ஆரோக்கியத்தில் பிரச்சனைகள் காணப்படும். மகிழ்ச்சியான வாழ்க்கையில் அவ்வப்போது சண்டை – சச்சரவுகள் வந்துச்செல்லும்.

**திருமண கோட்டில் சிறு இடைவெளி இருந்தால்?**

திருமண கோட்டில் தெளிவின்மை, இடையில் இடைவெளி இருப்பது விவாகரத்து, மண வாழ்க்கையில் பிரச்சனைகளை குறிக்கிறது. தம்பதியர் இடையே கருத்து வேறுபாடு உண்டாகலாம் எனவும், குறுகிய காலத்தில் திருமணம் பந்தம் முறிவடையக் கூடும் எனவும் நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

**சுக்கிர மேட்டிலும் பார்க்கலாம்!**

காதல் திருமணத்தை குறிக்கும் கோடு புதன் மேட்டில் மட்டும் அல்ல, சுக்கிர மேட்டிலும் – கட்டை விரலுக்கு கீழ் உள்ள பகுதியிலும் – காணப்படுகிறது. குறித்த இந்த பகுதி உயர்ந்த நிலையில் இருப்பின், காதல் திருமணத்திற்கான வாய்ப்பு அதிகம் இருக்கும் என நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

## ஆண்டிபட்டி சட்டமன்ற தொகுதி தி.மு.க சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம்!




ஆண்டிபட்டி, பிப். 14–

தேனி தி.மு.க தெற்கு மாவட்டம், ஆண்டிபட்டி சட்டமன்ற தொகுதி தி.மு.க சார்பில் தமிழ்நாடு தலைகுனியாது என்ற தலைப்பில் மாபெரும் பொதுக்கூட்டம் ஆண்டிபட்டி வைகை சாலையில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் தலைமை தாங்கினார். கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜாராம், பேரூர் செயலாளர் சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்து வரவேற்பு உரையாற்றினார்கள்.


கூட்டத்தில் தி.மு.க துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற மாநிலங்களவை குழுத் தலைவருமான திருச்சி சிவா சிறப்புரையாற்றினார். மேலும், தேனி தெற்கு மாவட்ட செயலாளரும், கம்பம் எம்.எல்.ஏ.வுமான ராமகிருஷ்ணன், மாநில தீர்மானக் குழு இணைச் செயலாளர் ஜெயக்குமார், மாநில கொள்கை பரப்பு துணைச் செயலாளர் பாண்டியன், தலைமை செயற்குழு உறுப்பினர் ஆண்டிபட்டி முன்னாள் எம்.எல்.ஏ.ஆசையன் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் கலந்துகொண்டு உரையாற்றினர். தி.மு.க இளைஞர் அணியின் ஆண்டிபட்டி கிழக்கு ஒன்றிய செயலாளர் அர்ச்சுனன், மேற்கு ஒன்றிய செயலாளர் எஸ்.டி.எஸ்.சிவா உள்பட இளைஞர் அணியினர் மற்றும் சார்பு அணியின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## பழனியில் திமுக மகளிர் அணியினர் ஆலோசனைக் கூட்டம்!

பழனி, பிப். 14–

பழனியில் திமுக மகளிர் அணியினர் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. நகர் மன்ற தலைவர் உமா மகேஸ்வரி தலைமை தாங்கினார். மகளிர் அணி மாவட்ட அமைப்பாளர் இந்திரா திருநாவுக்கரசு, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் அஸ்வின் பிரபாகரன், நகர செயலாளர் வேலுமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தின் முடிவில், கலைஞர் மகளிர் உரிமைத் தொகையாக, திமுக அரசு குடும்ப தலைவிகளுக்கு ரூ5000 வழங்கியதற்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடினார்கள். இதில் கவுன்சிலர் சுரேஷ், காளீஸ்வரி பாஸ்கரன், உட்பட ஏராளமான நிர்வாகிகள் பங்கேற்றனர். முன்னதாக கலைஞர் உரிமைத் தொகை வழங்கியதையொட்டி நகரச் செயலாளர் வேலுமணி தலைமையில் இனிப்புகள் வழங்கப்பட்டது. மாணவர் அணி செயலாளர் அஸ்வின் பிரபாகரன், இளைஞரணி லோகநாதன், ஒன்றிய செயலாளர் சாமிநாதன், ஒன்றிய செயலாளர் சௌந்தரபாண்டியன், ஆகியோர் பங்கேற்றனர்




மதுரை மாநகரில் முனிச்சாலை பகுதியில் செயல்படும் மதுரை மாநகராட்சி உயர்நிலைப் பள்ளி வளாகத்தில் தமிழ் கூடல் திருவிழா சிறப்பாக நடைபெற்றது. முத்தமிழ் அறிஞர் கலைஞர் மன்றம் சார்பில் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. தலைமை ஆசிரியர் ரூபி வரவேற்றார். சிறப்பு விருந்தினராக கவிஞர் கணேசன் கலந்துகொண்டு உரையாற்றினார். நல்லாசிரியர் சண்முகத்திற்குமரன் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.



## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்

### உங்கள் ஆயுள் அதிகரிக்கணுமா..? சாப்பிடும்போது இந்த தவறை பண்ணாதீங்க..!!



'ஃபாஸ்ட் புட்' மற்றும் 'குயிக் மீல்ஸ்' என்ற பெயரில் எங்கும் விரைவு மயமாகிவிட்ட இந்தக் காலகட்டத்தில், நாம் எதை உண்கிறோம் என்பதை விட, எப்படி உண்கிறோம் என்பதில்தான் அதிக ஆபத்து ஒளிந்திருக்கிறது. நேரத்தைச் சேமிப்பதாக நினைத்துக்கொண்டு கைபேசி அல்லது தொலைக்காட்சியைப் பார்த்தபடி இயந்திரத்தனமாக உணவை விழுங்கும் பழக்கம், நம் உடலுக்குள் கண்ணுக்குத் தெரியாத பல ஆரோக்கியச் சிதைவுகளை ஏற்படுத்தி வருகிறது. இதனை ஒரு சாதாரண பழக்கமாகக் கடந்து போகாமல், ஒரு தீவிர உடல்நல அபாயமாகப் பார்க்க வேண்டும் என்று மருத்துவ வல்லுநர்கள் எச்சரிக்கின்றனர்.

ஊட்டச்சத்து குறித்த 'ஃப்ரான்டியர்ஸ்' (Frontiers) அமைப்பு மேற்கொண்ட ஆய்வின்படி, அவசர அவசரமாக உண்பது உடல் பருமன், உயர் ரத்த அழுத்தம் மற்றும் வளர்சிதை மாற்றக் கோளாறுகளை (Metabolic Syndrome) உண்டாக்குகிறது. இது காலப்போக்கில் இதய நோய்கள் மற்றும் நீரிழிவு பாதிப்பிற்கு வித்திடுகிறது. மேலும், 2024–ஆம் ஆண்டு 'நேச்சர்' (Nature) இதழ் வெளியிட்ட ஆய்வறிக்கையில், உணவைச் சரியாக மென்று உண்ணாமல் விழுங்குபவர்களுக்குக் கல்லீரலில் கொழுப்பு படியும் (Fatty Liver) அபாயம் அதிகம் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. உணவை வாயிலேயே நன்றாக அரைக்காமல் வயிற்றுக்குள் தள்ளும்போது, செரிமான மண்டலம் பெரும் அழுத்தத்திற்கு உள்ளாகிறது.

உணவை மெதுவாக மென்று உண்ணும்போது மட்டுமே குடலுக்கும் மூளைக்கும் இடையிலான சமிக்ஞைகள் சரியாக வேலை செய்யும். நாம் போதுமான அளவு உண்டுவிட்டோம் என்ற திருப்தி நிலையை (Satiety) மூளை உணர்வதற்கு சுமார் 20 நிமிடங்கள் வரை ஆகும். ஆனால், அதற்குள்ளாகவே உணவை வேகமாகச் சாப்பிட்டு முடிப்பதால், உடல் தேவைக்கும் அதிகமான கலோரிகளை நாம் உட்கொண்டு விடுகிறோம். இதன் விளைவாகக் காற்றையும் சேர்த்து விழுங்குவதால் அடிவயிறு வீக்கம், நெஞ்சு எரிச்சல் போன்ற உபாதைகள் ஏற்படுகின்றன. மாறாக, நிதானமாக மென்று உண்ணும் பழக்கம் ரத்தத்தில் குளுக்கோஸ் அளவு திடீரென அதிகரிப்பதையும் தடுக்கிறது.

உணவு உண்பது என்பது வெறும் பசியைப் போக்குவது மட்டுமல்ல, அது ஒரு சமூகப் பழக்கமாகும். சாப்பிடும்போது கைபேசியை தூரத்தில் வைத்துவிட்டு, உணவின் சுவை மற்றும் மணத்தை அனுபவித்து உண்ண வேண்டும். குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் உரையாடியபடி மகிழ்வோடு உண்ணும்போது, இயல்பாகவே உண்ணும் வேகம் குறையும். அதீதமாக பதப்படுத்தப்பட்ட உணவுகளைத் தவிர்த்து, நார்ச் சத்து மிகுந்த பழங்கள், காய்கறிகள் மற்றும் தானியங்களைச் சேர்த்துக் கொள்வது சிறந்தது. "உணவை அருந்துங்கள்; நீரைப் பருகுங்கள்" என்ற பழமொழிக்கு ஏற்ப, உணவை கூழ் போல மென்று உட்செலுத்துவதே நீண்ட ஆயுளுக்கான ரகசியமாகும்,

# டாஸ்மாக் மதுக்கடைகளை மூடி ஊழியர்கள் 17-ந்தேதி போராட்டம்!

சென்னை, பிப். 14–

டாஸ்மாக் ஊழியர்கள் பணி நிரந்தரம், காலமுறை ஊதியம், ஓய்வூதியம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த 1–ந்தேதி முதல் காத்திருப்பு போராட்டங்களை நடத்தி வருகிறார்கள்.

இந்தப் போராட்டத்தை சி.ஐ.டி.யு., ஏ.ஐ.டி.சி. பாட்டாளி, விடுதலை சிறுத்தை உள்ளிட்ட முக்கிய தொழிற்சங்கங்கள் கூட்டாக இணைந்து நடத்துகின்றன. டாஸ்மாக் ஊழியர்கள் போராட்டத்திற்கு அரசியல் கட்சி தலைவர்களும் சிலர் ஆதரவு தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில் போராட்டத்தை தீவிரப்படுத்த திட்டமிட்டுள்ளனர். அரசு இதுவரையில் அழைத்து பேசாததால் அடுத்த கட்டமாக 17–ந்தேதி முதல் காலவரையற்ற கடை அடைப்பு போராட்டத்தை நடத்த முடிவு செய்துள்ளனர். போராட்டம் குறித்த நோட்டீஸ் டாஸ்மாக் மேலாண்மை இயக்குநருக்கு கொடுக்க




ப்பட்டுள்ளது. நாளை மறுநாள் (16–ந்தேதி) இரவு 10 மணிக்கு டாஸ்மாக் கடைகளை மூடி சாவியை நிர்வாகத்திடம் கொடுத்து விடுவதாகவும் 17–ந்தேதியில் இருந்து பணிக்கு செல்ல மாட்டோம் என்றும் கூட்டமைப்பு சார்பில் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து தொழிற்சங்க கூட்டமைப்பு நிர்வாகிகள் கூறியதாவது:–

தமிழ்நாட்டில் 4,749 டாஸ்மாக் கடைகள் தற்போது செயல்பட்டு வருகின்றன. இதில் 23 ஆயிரம் ஊழியர்கள் பணியாற்றி வருகிறார்கள். மிகவும் குறைந்த சம்பளத்தில் 23 ஆண்டுகளாக பணியாற்றி வரும் இவர்களை பணி நிரந்தரம் செய்து காலமுறை ஊதியம் வழங்க வேண்டும் என்பது முக்கியமான கோரிக்கையாகும்.

14 நாட்கள் தொடர்ந்து போராடிவரும் நிலையில் எங்களை இதுவரையில் அரசு அழைத்துப் பேசவில்லை. அதனால் பணி புறக்கணிப்பு போராட்டத்தை எடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டு இருக்கிறோம். மேலும் அனைத்து மாவட்டங்களிலும் காலிபாட்டில் ஸ்டிக்கர்களை ஒப்படைக்கவும் முடிவு செய்துள்ளோம்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

இந்த போராட்டத்தில் அ.தி.மு.க. அண்ணா தொழிற்சங்கம் கலந்து கொள்ளுமா என்று அதன் மாநில செயலாளர் சிவகுமாரிடம் கேட்டதற்கு, இது பற்றி தலைமையிடம் கேட்டு முடிவு செய்வதாக தெரிவித்தார்.

டாஸ்மாக் கடைகளில் பணிபுரியும் மேற்பார்வையாளர்கள், விற்பனையாளர்கள், உதவியாளர்கள் இந்தப் போராட்டத்தில் பங்கேற்பதால் பாதிப்பு ஏற்படக்கூடும். ஆளுங்கட்சி தொழிற்சங்கமான தொ.மு.ச. தொழிலாளர்கள் இதில் பங்கேற்பார்களா என்று தெரியவில்லை. தொழிற்சங்க கூட்டமைப்பு சார்பில் நடைபெறும் காலவரையற்ற கடையடைப்பு போராட்டத்தை முறியடிக்க டாஸ்மாக் நிர்வாகம் என்ன நடவடிக்கை எடுக்கப்போ கிறது என்பது ஓரிரு நாட்களில் தெரிய வரும்.

# அம்பானிக்கு ஜாக்பாட்.. வெனிசுலாவிடமிருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்ய ரிலையன்ஸுக்கு அமெரிக்கா அனுமதி!

அமெரிக்கா, பிப். 14–

கடந்த மாதம், தென் அமெரிக்க நாடான வெனிசுலாவுக்குள் ஊடுருவிய அமெரிக்க ராணுவம் அந்நாட்டு அதிபர் மதுரோ மற்றும் அவரது மனைவியை கைது செய்து அமெரிக்காவுக்கு நாடு கடத்தியது. அவர்கள் மீது போதைப்பொருள் பயங்கரவாத வழக்கு நடந்து வருகிறது.



இருப்பினும் இடதுசாரி ஆட்சி நடக்கும் வெனிசுலாவின் எண்ணெய் வளத்தை கைப்பற்றவே அமெரிக்கா இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாக கூறப்படுகிறது. அதை மெய்ப்பிக்கும் வகையில் அமெரிக்க நிறுவனங்கள் தான் இனி வெனிசுலா எண்ணெய் வளத்தை நிர்வகிக்கும் என அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவித்தார்.

வெனிசுலாவின் துணை அதிபராக இருந்து அதிபராக பொறுப்பேற்றுள்ள டெல்சி ரோட்ரிக்ஸ் அமெரிக்காவுக்கு ஒத்துழைப்பதாக அறிவித்தார். எனவே இந்தியா ரஷியா, ஈரான் ஆகிய நாடுகளிடம் இருந்து எண்ணெய் வாங்கு வதற்கு பதிலாக தங்கள் மூலமாக வெனிசுலாவில் இருந்து எண்ணெய் வாங்கலாமே என அமெரிக்கா அழுத்தம் கொடுத்தது.

இதன் விளைவாக ரஷியாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்க மாட்டோம் என்ற நிபந்தனையுடன் இந்தியாவுடன் அமெரிக்கா வர்த்தக ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. அமெரிக்கா கூறி வரும்போதும், இந்திய தலைவர்கள் ரஷியாவிடம் எண்ணெய் வாங்கப்படுமா இல்லையா என்பது குறித்து இன்னும் தெளிவான விளக்கத்தை அளிக்கவில்லை.

இந்த நிலையில்தான் இந்தியாவின் முன்னணி தனியார் நிறுவனமான முகேஷ் அம்பானியின் ரிலையன்ஸ் நிறுவனம், வெனிசுலாவிடம் இருந்து எண்ணெய் வாங்கி இந்தியாவுக்கு இறக்குமதி செய்யும் அனுமதியை அமெரிக்காவிடம் இருந்து பெற்றுள்ளது என தகவல் வெளியாகி உள்ளது.

வெனிசுலாவிடமிருந்து பல சர்வதேச வர்த்தகர்கள் ஏற்கனவே எண்ணெய் வாங்க அனுமதி பெற்றுள்ள நிலையில், தற்போது இந்தியாவின் ரிலையன்ஸ் நிறுவனத்திற்கு அனுமதி கிடைத்துள்ளது.

இந்த அனுமதி குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பை ரிலையன்ஸ் நிறுவனம் இன்னும் வெளியிடவில்லை.

இந்த அனுமதியின் மூலம் ரஷியாவுக்கு அடுத்தபடியாக வெனிசுலாவிடமிருந்தும் இந்தியாவுக்குக் குறைந்த விலையில் எண்ணெய் கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. முன்னதாக வெனிசுலாவிடம் இருந்து சீனா அதிகளவில் எண்ணெய் கொள்முதல் செய்து வந்த நிலையில் தற்போது அதன் பிடி அமெரிக்கா வசம் சென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

# தமிழக சட்டசபை தேர்தல்: 2 ஐஏஎஸ் அதிகாரிகள் தேர்தல் பணிக்கு மாற்றம்!

சென்னை, பிப். 14–

தமிழக சட்டசபை தேர்தல் ஏப்ரல் மாதம் நடைபெற வாய்ப்பு உள்ளது. தேர்தலுக்கு இன்னும் ஓரிரு மாதங்களே உள்ள நிலையில் அரசியல் கட்சிகள் தேர்தல் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வருகின்றன.



பிரசாரம், பொதுக்கூட்டம், கூட்டணி, தொகுதி பங்கீடு, நலத்திட்டப்பணிகள், கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனை என பல்வேறு நடவடிக்கைகளை அரசியல் கட்சிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

அதேவேளை, தேர்தல் பணிகளை தேர்தல் ஆணையமும் தீவிரப்படுத்தி வருகின்றன. வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப்பணி, வரைவு வாக்காளர் பட்டியல் வெளியீடு, இறுதி வாக்காளர் பட்டியல் வெளியீடு என பணிகளை தீவிரப்படுத்தி வருகிறது.

இந்நிலையில், தமிழக சட்டசபை தேர்தலையொட்டி 2 ஐஏஎஸ் அதிகாரிகளை தேர்தல் பணிக்கு மாற்றி தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

அதன்படி சிஎம்டிஏ தலைமை செயல் அதிகாரி சிவஞானம் (ஐஏஎஸ்) கூடுதல் தலைமை தேர்தல் அதிகாரியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

அதேபோல், தமிழ்நாடு மின் ஆளுமை முகமை இணை இயக்குனர் ஸ்ருதன் ஜெய் நாராயணன் (ஐஏஎஸ்) இணை தலைமை தேர்தல் அதிகாரியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார். இந்த அதிகாரிகள் இருவரும் தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் உடன் இணைந்து செயல்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காதலர் தினம்: எல்லை மீறினால் நடவடிக்கை பாயும் - காதல் ஜோடிகளுக்கு போலீசார் எச்சரிக்கை!

சென்னை, பிப். 14–

உலகம் முழுவதும் காதலர் தினம் இன்று கொண்டாடப்படுகிறது. தினமும் காதலை வளர்த்தாலும் காதலர் தினத்தை தங்களது 'ஸ்பெஷல்' தினமாக காதலர்கள் கருதுகிறார்கள். எனவே அவர்கள் மெரினா, எலியட்ஸ் கடற்கரை, கிண்டி சிறுவர் பூங்கா, தனியார் வணிக வளாகங்கள், திரையரங்குகள் உள்ளிட்ட இடங்களில் இன்றைய தினம் அதிகளவில் கூடுவார்கள்.



எனவே காதலர் தினத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்து அமைப்புகள் போராட்டங்கள் நடத்துவது வழக்கம். இந்த போராட்டங்களால் விரும்பத்தகாத நிகழ்வுகள் அரங்கேறி இருக்கின்றன. இதனால் காதலர் தினத்தன்று மெரினா கடற்கரை உள்ளிட்ட காதலர்கள் அதிகளவில் கூடும் இடங்களில் போலீசார் ரோந்து பணியில் ஈடுபடுவது வழக்கம். காதல் புனிதமானது என்பது காதலர்களின் வேத வாக்காக இருந்தாலும், இது தமிழ்நாட்டின் பண்பாடு, கலாசாரத்துக்கு எதிரானது என்பது இந்து அமைப்பு உள்ளிட்ட சில அமைப்புகளின் கோஷமாக இருக்கிறது. மேலும் காதலர் தின கொண்டாட்டங்களுக்கு தடை விதிக்க வேண்டும் என்பது அவர்களது வலியுறுத்தலாக இருந்து வருகிறது.

அந்த வகையில் காதலர் தினத்தையொட்டி 5 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு மற்றும் ரோந்து பணியில் ஈடுபடுகின்றனர். காதலர்களை மிரட்டுபவர்கள், அச்சுறுத்துபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், அதேபோன்று பொது இடங்களில் எல்லை மீறும் காதல் ஜோடிகள் மீதும் நடவடிக்கை பாயும் என்று போலீசார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

## சினிமா துளிகள்..!

### சிவகார்த்திகேயனின் 26-வது படம்...கதாநாயகி இவரா?



பராசக்தி படத்தின் வெற்றியை தொடர்ந்து சிவகார்த்திகேயன் அடுத்து தனது 26–வது படத்திற்கு தயாராகி வருகிறார். இப்படத்தை வெங்கட் பிரபு இயக்க உள்ளார். விரைவில் இது குறித்த அதிகாரபூர்வ அறுவிப்பு வெளியாக உள்ளது.

இந்நிலையில், நடிகை பாக்யஸ்ரீ போர்ஸ் இப்படத்தில் கதாநாயகியாக நடிக்க உள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது. 'காந்தா' திரைப்படத்தின் மூலம் ரசிகர்களை கவர்ந்த இவர், தற்போது சிவகார்த்திகேயன் நடிக்கவுள்ள 'எஸ்கே26' படத்தில் இணைய உள்ளதாக கூறப்படுகிறது.

பாக்யஸ்ரீ போர்ஸ், இந்தி படங்களான 'யாரியான் 2' (2023) மற்றும் சந்து ஜாம்பியன் (2024) ஆகியவற்றில் சிறிய வேடங்களில் நடித்து சினிமாவில் அறிமுகமானார். பின்னர் தெலுங்கு திரைப்படமான 'மிஸ்டர் பச்சான்' மூலம் கதாநாயகியாக அறிமுகமானார்.

விஜய் தேவரகொண்டாவுடன் 'கிங்டம்', ராம் பொதினேனியுடன் 'ஆந்திரா கிங் தாலுகா' ஆகிய படங்களில் நடித்தார். இந்நிலையில், 'எஸ்கே26' படத்தில் அவர் இணைவாரா? என்ற எதிர்பார்ப்பு ரசிகர்களிடையே அதிகரித்துள்ளது.

## வேலை வாய்ப்பு

### இந்திய பங்குகள் மற்றும் பரிவர்த்தனை வாரியத்தில் 90 காலியிடங்கள்

**SEBI Recruitment 2026**

- Vacancy: 90
- Post Name: Young Professional
- Qualification: B.E/B.Tech, LLB, MBA, M.Sc, MCA, Master Degree, CA/CMA
- Selection Process: Short Listing, Interview

Organization Name: Securities and Exchange Board of India (SEBI / Board)
Job Category: Central Govt Jobs
Employment Type: Temporary Basis
Total No of Vacancies: 91 Young Professional (Securities Market Operations), Young Professional (Law), Young Professional (Research), Young Professional (Information Technology), Young Professional (Rajbasha) Posts
Place of Posting: Mumbai
Starting Date: 08.02.2026
Last Date: 29.02.2026
Apply Mode: Online
Official Website: https://www.sebi.gov.in/

# மத்திய அமைச்சர் அமித்ஷாவுடன் முதலமைச்சர் ரங்கசாமி தனியாக சந்தித்து ஆலோசனை!



காரைக்கால், பிப். 14–

காரைக்காலில் நிகழ்ச்சிகள் முடிந்தவுடன் மத்திய அமைச்சர் அமித்ஷாவை முதலமைச்சர் ரங்கசாமி தனியாக சந்தித்து ஆலோசனை நடத்துகிறார்.

அப்போது சட்டசபை தேர்தலில் கூட்டணியில் மற்ற கட்சிகளை சேர்ப்பது மற்றும் தொகுதி பங்கீடு குறித்து இருவரும் ஆலோசனை நடத்துகிறார்கள்.

ஏற்கனவே, பா.ஜ.க–என்.ஆர்.காங்கிரஸ் கூட்டணியில் அ.தி.மு.க., லட்சிய ஜனநாயக கட்சி இணைந்து போட்டியிடுவது உறுதியாகிவிட்ட நிலையில் அந்த கட்சிகளுக்கு எத்தனை தொகுதிகள் ஒதுக்கீடு செய்வது மற்றும் பா.ஜ.க மற்றும் என்.ஆர். காங்கிரஸ் எத்தனை தொகுதிகளில் போட்டியிடுவது என்பது இந்த ஆலோசனைக் கூட்டத்தில் உறுதி செய்யப்படும் என கூறப்படுகிறது.

# புதுச்சேரி அரசு பள்ளிகளில் 6-ம் வகுப்பு முதல் மாணவர்களுக்கு இலவச லேப்டாப்: முதல்-அமைச்சர் ரங்கசாமி அறிவிப்பு!



புதுச்சேரி, பிப். 14–

புதுச்சேரி கல்வித்துறை சார்பில் அரசு மற்றும் அரசு உதவி பெரும் பள்ளிகளில் பிளஸ்–1, பிளஸ்–2 மாணவர்களுக்கு லேப்டாப் வழங்கும் விழா நடந்தது.

விழாவில் கவர்னர் கைலாஷ்நாதன், முதல்–அமைச்சர் ரங்கசாமி ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களுக்கு லேப்டாப் வழங்கினர். விழாவில் முதல்–அமைச்சர் ரங்கசாமி பேசியதாவது:–

பள்ளி கல்வி சிறந்த முறையில் இருக்க வேண்டும் என்றால் ஆசிரியர்கள் அவசியம். அதற்காக காலி பணியிடங்கள் அத்தனையும் அரசு நிரப்பி வருகிறது.

ஏழை மாணவர்களும் மருத்துவக் கல்லூரியில் படிக்க முடியும் என்ற நிலையை புதுச்சேரி அரசு உருவாக்கி அதற்காக அரசு பள்ளி மாணவர்களுக்கு 10 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது.

இந்தாண்டு 37 பேர் மருத்துவ கல்லூரியில் படிக்கின்றனர். இது மட்டுமின்றி என்ஜினீயர், செவிலியர் கல்லூரி என அனைத்து கல்லூரியிலும் இடஒதுக்கீடு வழங்கப்பட்டு கல்லூரியில் பட்டப்படிப்பு முடிக்கும் வாய்ப்பை உருவாக்கி உள்ளோம். இப்போது மாணவர்கள் புதிய தொழிற்நுட்பம் மூலம் அனைத்தையும் தெரிந்து கொள்ளும் வகையில் 6–ம் வகுப்பில் இருந்து லேப்டாப் கொடுத்தால் எளிதாக இருக்கும் என என்னிடம் கேட்டனர். எனவே அரசு பள்ளிகளில் 6–ம் வகுப்பில் இருந்து மாணவர்களுக்கு லேப்டாப் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் பேசினார்.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்

127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881



## ஈரானில் ஆட்சியை அகற்ற திட்டம்?- அமெரிக்க அதிபர் டிரம்ப் சூசக தகவல்!

அமெரிக்கா, பிப். 14–

அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பாக அமெரிக்கா– ஈரான் இடையே மோதல் இருந்து வருகிறது. இதற்கிடையே அணுசக்தி தொடர்பாக இரு நாடுகள் இடையே பேச்சுவார்த்தை நடத்தி வரும் நிலையில் இன்னும் உடன்பாடு எட்டப்படவில்லை.



ஒப்பந்தத்தில் ஈரான் கையெழுத்திட வேண்டும் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் வலியுறுத்தி வருகிறார்.

மேலும் ஈரானுக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையில் அந்நாட்டு அருகே அமெரிக்காவின் மிகப்பெரிய கடற்படை அனுப்பப்பட்டு யு.எஸ்.எஸ் ஆபிரகாம் லிங்கன் போர்க்கப்பல் நிறுத்தப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து ஈரானை நோக்கி மேலும் ஒரு அமெரிக்க போர்க்கப்பலை (யு.எஸ்.எஸ் ஜெரால்ட் ஆர் போர்டு) அனுப்ப டிரம்ப் உத்தரவிட்டு உள்ளார்.

இந்த நிலையில் அமெரிக்க அதிபர் டிரம்ப் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமெனி ஆட்சியை அகற்ற அழுத்தம் கொடுப்பது தொடர்பாக நிருபர்கள் கேள்வி கேட்டனர்.

அதற்கு டிரம்ப் பதில் அளித்து கூறியதாவது:–

ஈரானுக்கு எதிராக அமெரிக்கா ராணுவ நடவடிக்கை எடுக்கலாமா வேண்டாமா என்பதை முடிவு செய்யும் போது, ஈரானில் அதிகார–ஆட்சி மாற்றம் ஒரு சிறந்த விஷயமாக இருக்கும். அது நடக்கக்கூடிய சிறந்த விஷயமாகத் தெரிகிறது.

அவர்கள் 47 ஆண்டுகளாக பேசிக்கொண்டு மட்டுமே இருக்கிறார்கள். நாங்கள் ஒரு ஒப்பந்தத்தை எட்டவில்லை என்றால் அது எங்களுக்கு தேவைப்படும் என்பதால் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். மிக விரைவில் அமெரிக்காவின் 2–வது போர்க்கப்பல் ஈரானை நோக்கி புறப்படும் என்றார். இதன்மூலம் ஈரான் ஆட்சியாளர்களுக்கு டிரம்ப் மறைமுகமாக எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## ‘குரூப் - 2, 2ஏ’ தேர்வு ரத்து: ஐந்து பேர் ‘சஸ்பெண்ட்’!

சென்னை, பிப். 14–

நம் நாளிதழில் வெளியான செய்தியை அடுத்து, ‘குரூப் – 2, 2ஏ’ தேர்வு ரத்து விவகாரத்தில், டி.என்.பி.எஸ்.சி., அலுவலர்கள் ஐந்து பேர், ‘சஸ்பெண்ட்’ செய்யப்பட்டு உள்ளனர்.




தமிழக அரசு துறைகளில், உதவி ஆய்வாளர், இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர், நன்னடத்தை அலுவலர், என, பல்வேறு குரூப் – 2, 2ஏ பணிகளில், 828 காலி பணியிடங்கள் உள்ளன.

இதற்கான முதன்மை தேர்வு, கடந்த 8ம் தேதி, தமிழகம் முழுதும், 38 மையங்களில் நடக்க இருந்தது. சென்னையில் தேர்வு மைய ஒதுக்கீட்டில் குளறுபடி ஏற்பட்டதால், தேர்வர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால், மாநிலம் முழுதும் தேர்வு ரத்து செய்யப்பட்டது.

இந்த குளறுபடிக்கு, தொழில்நுட்ப கோளாறு காரணம் என, டி.என்.பி.எஸ்.சி., விளக்கம் அளித்தது. ஆனால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காததால், தேர்வர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியது. இதுகுறித்து, நம் நாளிதழில் நேற்றுமுன்தினம் செய்தி வெளியானது. இந்நிலையில், தேர்வு ரத்து விவகாரம் தொடர்பாக, ஆறு அலுவலர்கள், ‘சஸ்பெண்ட்’ செய்யப்பட்டுள்ளனர்.

டி.என்.பி.எஸ்.சி., வெளியிட்ட அறிக்கை:

கடந்த 8ம் தேதி நடைபெற இருந்த, குரூப் – 2 மற்றும் 2ஏ முதன்மை தேர்வுகள், தொழில்நுட்ப கோளாறு காரணமாக ரத்து செய்யப்பட்டன. ஆரம்ப கட்ட விசாரணையின் அடிப்படையில், இரண்டு உதவி பிரிவு அலுவலர் மற்றும் நிரலர்கள், இரண்டு பிரிவு அலுவலர்கள், ஒரு சார் செயலர் ஆகியோர், ‘சஸ்பெ ண்ட்’ செய்யப்பட்டுள்ளனர். மேலும், துணை செயலர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வரும் காலங்களில், இத்தகைய தவறுகள் நிகழாத வகையில், கூடுதலான வழிமுறைகள் அமல்படுத்தப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளன.



## எச்.ராஜாவை நேரில் சந்தித்து நலம் விசாரித்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்!

சென்னை, பிப். 14–

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் எச்.ராஜாவை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்.

தொடர்ந்து, நேரில் வந்து நலம் விசாரித்த முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்து எச்.ராஜா தனது எக்ஸ் தள பக்கத்தில் நன்றி தெரிவித்து பதிவு வெளியிட்டுள்ளார்.

அந்த பதிவில் அவர் கூறியிருப்பதாவது:–

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும், முன்னாள் மத்திய அமைச்சர் T.R.பாலு MP அவர்களும் சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் H.ராஜா ஜி அவர்களை இன்று இரவு 7.50 மணிக்கு நேரில் சந்தித்து உடல்நலம் குறித்து விசாரித்தனர்.

தான் விரைவில் பூரண குணமடைந்து நலமோடு மக்கள் பணியாற்ற தங்களுடைய வாழ்த்துக்களை தெரிவித்தனர். தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், முன்னாள் மத்திய அமைச்சர் திரு.T.R.பாலு MP அவர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மகா சிவராத்திரி: எழும்பூரில் இருந்து திருவண்ணாமலை, வேலூருக்கு சிறப்பு ரெயில்!

சென்னை, பிப். 14–

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து திருவண்ணாமலைக்கு பஸ் மற்றும் ரெயில்களில் செல்கிறார்கள். கூட்ட நெரிசலை குறைப்பதற்காக சிறப்பு பஸ், ரெயில்கள் இயக்கப்படுகிறது. சென்னை எழும்பூரில் இருந்து திருவண்ணாமலைக்கு சிறப்பு ரெயில் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த ரெயில் நாளை (ஞாயிற்றுக்கிழமை) காலை 10.15 மணிக்கு எழும்பூரில் இருந்து புறப்பட்டு திருவண்ணாமலைக்கு பிற்பகல் 3 மணிக்கு சென்றடைகிறது. வருகிற 16–ந்தேதி இதே ரெயில் திருவண்ணாமலையில் இருந்து அதிகாலை 4 மணிக்கு புறப்பட்டு எழும்பூருக்கு காலை 9.15 மணிக்கு வந்து சேரும்.

இதேபோல எழும்பூரில் இருந்து வேலூர் கண்டோண்ட்மென்ட்டுக்கு முன்பதிவு இல்லாத மெமு எக்ஸ்பிரஸ் சிறப்பு ரெயில் புறப்படுகிறது. இந்த ரெயில் எழும்பூரில் இருந்து நாளை மதியம் 12 மணிக்கு புறப்பட்டு மாலை 6 மணிக்கு வேலூர் சென்றடைகிறது.

பின்னர் 16–ந்தேதி வேலூர் கண்டோண்ட்மென்ட்டில் இருந்து அதிகாலை 3 மணிக்கு புறப்பட்டு காலை 9.15 மணிக்கு தாம்பரம் வந்து சேருகிறது. இந்த 2 ரெயில்களுக்கான முன்பதிவு இன்று மதியம் 12 மணிக்கு தொடங்கியது. இதே போல விழுப்புரம்– திருவண்ணாமலை இடையேயும் விழுப்புரம்– வேலூர் இடையேயும் முன்பதிவு இல்லாத மெமு சிறப்பு ரெயில்கள் இயக்கப்படுகின்றன.

## எடை குறைந்த குழந்தைகளுக்கு பாதுகாப்பு பெட்டக திட்டம் துவக்கம்!

சென்னை, பிப். 14–

தமிழக அரசு மருத்துவமனைகளில், 52,000 குழந்தைகள் எடை குறைவாக பிறந்து, கண்காணிப்பில் இருக்கும் நிலையில், அக்குழந்தைகளுக்கு பாதுகாப்பு பெட்டகம் வழங்கும் திட்டத்தை, அமைச்சர் சுப்பிரமணியன் நேற்று துவக்கி வைத்தார்.



சென்னை எழும்பூர் அரசு மகப்பேறு மருத்துவமனையில், பச்சிளங் குழந்தை பாதுகாப்பு பெட்டகம் வழங்கும் திட்டம் மற்றும் ‘தாய்மை செயலி’ ஆகியவற்றை, அமைச்சர் சுப்பிரமணியன் துவக்கி வைத்து அளித்த பேட்டி:

தமிழகத்தில், ஆண்டுதோறும் 8 லட்சம் குழந்தைகள் பிறக்கின்றன. இவற்றில், 4.5 லட்சம் குழந்தைகள், அரசு மருத்துவமனைகளில் பிறக்கின்றன. இவர்களில், 20 சதவீதம் குழந்தைகள், 2 கிலோவுக்கு கீழ் எடை குறைவாக பிறக்கின்றன. தற்போது, 52,000 குழந்தைகள் எடை குறைவான நிலையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

இந்த குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து மற்றும் நோய் எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்துவதற்கும், தொடர் கவனிப்பிற்கும், இரும்புச்சத்து சொட்டு மருந்து, விட்டமின் பி3 மற்றும் மல்டி விட்டமின் சொட்டு மருந்துகள் அடங்கிய பச்சிளங் குழந்தை பாதுகாப்பு பெட்டகம் வழங்கப்படுகிறது. இதற்கு, 8.07 கோடி ரூபாய் செலவிடப்படுகிறது.

பிறந்த குழந்தை பராமரிப்புக்கான அறிவுறுத்தல் அடங்கிய கையேடு வழங்கப்படுகிறது. அதேபோல், தாய்மை செயலி துவக்கப்பட்டுள்ளது. கர்ப்பிணியர் பதிவு செய்தல், பேறுகால பரிசோதனைகள், பிரசவம், பிரசவத்திற்கு பிந்தைய பராமரிப்பு, குழந்தை வளர்ச்சி, தடுப்பூசி போன்றவற்றை இச்செயலி வாயிலாக கண்காணிக்க முடியும். இந்த ஆட்சி அமைந்த பின், தாய், சேய் மரண இறப்பு விகிதம் குறைக்கப்பட்டுள்ளது. இச்செயலி வாயிலாக, பூஜ்ஜிய நிலை எட்டப்படும். இவ்வாறு கூறினார்.




## மகளிருக்கு ரூ. 5,000 வழங்கி கூட்டணி கட்சிகளுக்கு ‘ செக்’

சென்னை, பிப். 14–

கூட்டணி கட்சிகளின் , ‘ சீட்’ பேரத்தை குறைக்க , மகளிர் உரிமைத் தொகை பெறும் , ஒன்று . முப்பத்து ஒன்று கோடி மகளிரின் வங்கிக் கணக்கில் , தலா , ஐயாயிரம் ரூபாயை , தி . மு .க., அரசு வரவு வைத்துள்ளது . இது குறித்து , தி . மு . க ., வட்டாரங்கள் கூறியதாவது : கூட்டணியில் உள்ள காங்கிரஸ் , வி . சி ., கம்யூனிஸ்ட் கட்சிகள் , ம . தி . மு . க ., உட்பட அனைத்து கூட்டணி கட்சிகளுக்கும் , இரண்டாயிரத்து இருபத்து ஒன்று சட்டசபை தேர்தலின் போது , ஒதுக்கிய அதே எண்ணிக்கையிலான தொகுதிகளை , வரும் தேர்தலுக்கும் ஒதுக்க , தி . மு . க ., திட்ட மிட்டுள்ளது . காங்கிரஸ் கூடுதல் தொகுதிகள் , ஆட்சியில் பங்கு கேட்டு , தி . மு . க ., வுக்கு நெருக்கடி ஏற்படுத்தி உள்ளது

அதை பின்பற்றி , வி . சி ., கம்யூனிஸ்ட் கட்சிகளும் கூடுதல் தொகுதிகளை கேட்கின்றன . தேர்தல் நெருங்கியுள்ள நிலையில் , கூட்டணி கட்சிகள் கூடுதல் தொகுதிகள் கேட்பது , தி . மு . க ., வுக்கு கடும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது . இந்த சூழலில் , மகளிர் உரிமைத் தொகை பெறும் , ஒன்று . முப்பத்து ஒன்று கோடி மகளிரின் வங்கி கணக்கில் , தலா , ஐயாயிரம் ரூபாயை , தி . மு . க ., அரசு செலுத்தி உள்ளது . இது , வரும் தேர்தலில் , வெற்றிக்கு மிகவும் உதவியாக இருக்கும் என , தி . மு . க ., கருதுகிறது

எனவே , கூடுதல் தொகுதிகளை கேட்காமல் , எங்களுடன் கூட்டணியில் தொடர்ந்தால் , போட்டியிடும் தொகுதிகளில் முழு வெற்றி கிடைக்கும் எனக் கூறி , கூட்டணி கட்சியினரின் ‘ சீட்’ பேரத்தை குறைக்க , தி . மு . க ., முடிவு செய்துள்ளது . இவ்வாறு அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## திமுக கூட்டணியில் 12 தொகுதிகள் கேட்டு அடம் பிடிக்கும் ம.தி.மு.க.: பட்டியலையும் வழங்கி புது நெருக்கடி!

சென்னை, பிப். 14–

தமிழகத்தில் கடந்த 2021–ம் ஆண்டு நடைபெற்ற சட்டசபை தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்ற ம.தி.மு.க.வுக்கு சாத்தூர், பல்லடம், மதுரை தெற்கு, வாசுதேவநல்லூர் (தனி), மதுராந்தகம் (தனி), அரியலூர் ஆகிய 6 தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. இந்த 6 தொகுதிகளிலும் தி.மு.க.வின் சின்னமான உதயசூரியனில் ம.தி.மு.க. வேட்பாளர்கள் களம் இறங்கினர். அதில், சின்னப்பா (அரியலூர்), பூமிநாதன் (மதுரை தெற்கு), சதன் திருமலைக்குமார்



(வாசுதேவநல்லூர்), ரகுராமன் (சாத்தூர்) ஆகிய 4 பேர் வெற்றி பெற்றனர்.

### காங்கிரசுக்கு எத்தனை தொகுதிகள்?

இந்த நிலையில், நடைபெற உள்ள சட்டசபை தேர்தலிலும் தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்றுள்ள ம.தி.மு.க., இந்த முறை 12 தொகுதிகள் வேண்டும் என கேட்டு அடம்பிடிப்பதாக கூறப்படுகிறது.

ஏற்கனவே, ஆட்சியில் பங்கு வேண்டும் என்று கொடி பிடித்த காங்கிரஸ் கட்சியையே இப்போதுதான் தி.மு.க. தனது வழிக்கு கொண்டு வந்திருக்கிறது. இன்னும் தொகுதிகள் எத்தனை என்பதில்கூட முடிவு எட்டப்படவில்லை. 35 முதல் 41 தொகுதிகள் வரை காங்கிரஸ் கேட்பதாகவும், 28 முதல் 30 தொகுதிகள் வரை கொடுக்கலாம் என்ற முடிவில் தி.மு.க. இருப்பதாகவும் கூறப்படு கிறது.

### திமுகவுக்கு புது தலைவலி

காங்கிரஸ் கட்சியுடனேயே இன்னும் இழுபறி நிலை நீடித்துக் கொண்டிருக்கும் நிலையில், இப்போது ம.தி.மு.க.வும் கூடுதல் தொகுதிகள் கேட்டு மல்லுக்கு நிற்பது தி.மு.க.வுக்கு புது தலைவலியை ஏற்படுத்தியுள்ளது.

அதுவும் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோவின் மகனும், எம்.பி.யுமான துரை வைகோ, வெற்றி வாய்ப்புள்ள தொகுதிகள் எவை என்பதை ஆராய்ந்து 12 தொகுதிகளை தேர்வு செய்துள்ளாராம்.

தேர்தலில் குறைந்தது 12 தொகுதிகளிலாவது போட்டியிட்டால்தான் ம.தி.மு.க.வின் சின்னமான ‘பம்பரம்’ கிடைக்கும் என்பதால் அவர்கள் இந்த முடிவை எடுத்துள்ளதாக கட்சி நிர்வாகிகள் தெரிவிக்கின்றனர்.

ம.தி.மு.க. கேட்கும் 12 தொகுதிகள் பட்டியலில், வாசுதேவநல்லூர், மதுரை தெற்கு, திருநெல்வேலி, தூத்துக்குடி, திருச்சி கிழக்கு, மணப்பாறை, கும்பகோணம், பாபநாசம், மயிலாடுதுறை, செங்கல்பட்டு, சாத்தூர், அரியலூர் ஆகியவை இடம்பெற்றுள்ளதாக கூறப்படுகிறது.

### கமல்ஹாசனுக்கு எம்.பி. பதவி

ஏற்கனவே, கடந்த ஆண்டு ஜூலை மாதம் வைகோவின் மாநிலங்களவை எம்.பி. பதவி முடிவுக்கு வந்தபோது, மீண்டும் அவருக்கு வாய்ப்பு வழங்கப்படும் என்று ம.தி.மு.க.வினர் நம்பிக் கொண்டிரு ந்தனர். ஆனால், 2024–ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் திருச்சி தொகுதியில் வைகோவின் மகன் துரை வைகோவுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டதை சுட்டிக்காட்டிய தி.மு.க. தலைமை, வைகோவுக்கு மறுத்து கமல்ஹாசனுக்கு அந்த மாநிலங்களவை எம்.பி. பதவியை ஒதுக்கிவிட்டது.

### மாற்று கோரிக்கை

இதனால், அதிருப்தியில் இருந்த ம.தி.மு.க. தலைமை இந்த முறை எப்படியாவது 12 தொகுதிகளை பெற்றுவிட வேண்டும் என்று கங்கணம் கட்டி நிற்கிறதாம். தேர்தல் ஆணையத்தின் அங்கீகாரத்தை தக்கவைக்க வேண்டும் என்றால், குறைந்தது 12 இடங்களில் போட்டியிட வேண்டியது அவசியம்.

அந்த வகையில், 12 தொகுதிகள் ஒதுக்க தி.மு.க. தலைமை முன்வரவில்லை என்றால், மாற்று கோரிக்கை ஒன்றையும் ம.தி.மு.க. முன்வைக்கிறதாம். அதாவது, கடந்த முறை ஒதுக்கியது போல 6 தொகுதிகளும், ஏப்ரல் மாதத்தில் காலியாகும் மாநிலங்களவை எம்.பி. பதவி ஒன்றும் தர வேண்டும் என்று தி.மு.க.வை வலியுறுத்துகிறதாம்.

### சபரீசனுக்கு எம்.பி. பதவி?

ஆனால், தி.மு.க. தலைமையோ, ஏப்ரல் மாதத்தில் காலியாகும் மாநிலங்களவை எம்.பி. பதவிக்கு முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலினின் மருமகன் சபரீசனுக்கு வழங்க முடிவு செய்திருப்பதாக பரபரப்பாக பேசப்படுகிறது.

இதுபோன்ற அரசியல் சூழ்நிலையில், இரண்டு விதமான கோரிக்கைகளுடன் ம.தி.மு.க. மல்லுக்கட்டுவது தி.மு.க. தலைமைக்கு புதிய தலைவலியை ஏற்படுத்தியுள்ளது.

## ஓரமா போய் விளையாடுங்க அங்கிள்: விஜயை வெளுக்கும் அ.தி.மு.க.,!

சென்னை, பிப். 14–

‘ மற்ற கட்சிகளில் இருந்து துாக்கி எறியப்பட்டவர்களை சேர்த்துக் கொண்டு , கட்சி என்ற பெயரில் , ஒரு ‘ வாட்ஸ் ஆப்’ குழுவை , த . வெ . க ., தலைவர் விஜய் நடத்திக் கொண்டிருக்கிறார்’ என , அ . தி . மு . க ., கடுமையாக விமர்சித்துள்ளது. இது தொடர்பாக , அ . தி . மு . க ., வெளியிட்ட பதிவு : .

நீங்க தனியாகவா வந்தீங்க பனையூர் பண்ணையார் அங்கிள் ; அப்பாவால சினிமா நடிகராக வந்தீங்க . சினிமாவில் ரஜினி , விஜயகாந்தை காப்பியடித்தார் விஜய் . அரசியலில் , அடுத்த கட்சி வரலாற்று தலை வர்களின் பாரம்பரியத்தை திருடி , காப்பியடித்து , அடுத்தவர் குதிரையில் சவாரி செய்யும் விஜய் எப்படி ஒரிஜினல் ஆவார்.

‘ தி . மு . க ., எதில் எல்லாம் ‘ அவுட் ஆப் கண்ட்ரோல்’ என்பதை , அ . தி . மு . க ., பொதுச்செயலர் பழனிசாமி உத்தரவுபடி , அ . தி . மு . க ., ஐ . டி ., விங் பதிவிட்டதை காப்பியடித்து , யாரோ எழுதிக் கொடுத்ததை , அடி மாறாமல் பனையூர் பண்ணையார் நடிகர் விஜய் ஒப்பித்துள்ளார் . சொந்தமாக ஒரு வரிகூட பேசத் தெரியாதவர் , அடுத்தவர் வரலாற்றை பற்றி கேள்வி கேட்கலாமா . கோவில் வாசலில் உடைக்கப்படும் தேங்காய் சில்லுகளைப் பொறுக்கி எடுப்பது போல் , மற்ற கட்சிகளில் இருந்து துாக்கி எறியப்பட்டவர்களை சேர்த்துக்கொண்டு , கட்சி என்ற பெயரில் ஒரு ‘ வாட்ஸ் ஆப்’ குழுவை நடத்திக் கொண்டிருக்கும் விஜய் , ‘ அடுத்த கட்சிகளை கலைத்து விட்டு வாருங்கள்’ என்று சவால் விடுவது சிரிப்பாக உள்ளது. விஜய்க்கு அரசியல் புரிதலோ , வரலாறோ இல்லை . அதனால் அ . தி . மு . க ., தலைவர்களை , இரவல் பெற்று ‘ ஸ்டிக்கர்’ ஒட்டிக்கொண்டு திரிகிறார் . ஈ . வெ . ராமசாமி , அண்ணாதுரை , எம் . ஜி . ஆர் . , பெயரில் சவாரி செய்வதை நிறுத்துங்கள் பார்ப்போம். ஜெயலலிதா ஆட்சி அமைய ‘ அணிலாய்’ இருந்ததாக சொல்லிய விஜயை , மிகப் பெரிய துயரமான நாற்பத்து ஒன்று பேர் இறந்தபோது பேசக்கூடாது என்று அரசியல் பண்போடு பழனிசாமி நடந்து கொண்டார். விஜய் சினிமா பட டிக்கெட்டை இரண்டாயிரம் ரூபாய்க்கு விற்பதெல்லாம் கொள்ளை இல்லையா ; அப்படி பார்த்தால் விஜய்க்கு முப்பது வருஷ கொள்ளை அனுபவம் இருக்கு தானே . கொஞ்சம் ஓரமா போய் விளையாடுங்க விஜய் அங்கிள் . இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது



## வார இறுதி நாளில் அதிரடியாக உயர்ந்த தங்கம் விலை!



சென்னை, பிப். 14–

வார இறுதி நாளான தங்கம் விலை அதிரடியாக உயர்ந்துள்ளது. அதன்படி கிராமுக்கு 160 ரூபாய் உயர்ந்து ஒரு கிராம் ரூ.14,560–க்கும் சவரனுக்கு 1,280 ரூபாய் உயர்ந்து ஒரு சவரன் ரூ.1,16,480–க்கும் விற்பனையாகிறது. வெள்ளி விலையில் மாற்றமில்லாமல் ஒரு கிராம் வெள்ளி 280 ரூபாய்க்கும் பார் வெள்ளி ரூ.2 லட்சத்து 80 ஆயிரத்துக்கும் விற்பனையாகிறது.

## தேவை

தமிழகத்தில் இயங்கி வரும் பிரபல தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழுக்கு, தமிழகம் முழுவதும் துடிப்பும், ஆர்வமும் மிக்க இளைஞர்கள் செய்திகள் சேகரிக்க மற்றும் புகைப்படம் எடுக்க தேவை.

தொடர்புக்கு:
செல் : 7904806432
போன்: 0452 – 4916699

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020